2018 ஜூன் 5]

செய்துவிட்டு புதிய கட்டடம் கட்டுவதற்கு துறை ரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுவாக, நியாய விலைக் கடைக்கு தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தோ, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் சிறப்பு நிதியிலிருந்தோ அல்லது ஊராட்சி முகமை நிதியிலிருந்தோதான் கட்டடங்கள் கட்டிக் கொடுக்கப்படுவது வழக்கம். இல்லையென்றால் அந்தப் பகுதியில் இருக்கின்ற பணக்காரர்கள், தாங்களாகவே முன்வந்து நியாய விலைக் கடைக்கு இடத்தை தானமாக எழுதிக் கொடுத்தால் அதுவும் வரவேற்கக்கூடியதாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தன்னுடைய கோரிக்கையை சொல்லியிருக்கின்றார். மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு உறுதியாக, துறை ரீதியான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 123, மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

123—

துணை மின் நிலையம்

***18599—திரு. S. செம்மலை:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி கிராமத்தில் 110 K.V. துணை மின் நிலையம் அமைக்கும் பணியினை விரைந்து முடிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேச்சேரி ஒன்றியம், பொட்டனேரி பகுதியில் 110 K.V. திறன் கொண்ட துணை மின் நிலையம் கேட்டிருக்கின்றார். அந்த அளவிற்கு மின் பளு அங்கு இல்லை. இப்போது புதிதாக 33/11 K.V. திறன் கொண்ட ஒரு துணை மின் நிலையம் அமைக்கும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது

[*2018 ஜூன் 5*

என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொட்டனேரி கிராமத்தில் 33/11* K.V. *துணை மின் நிலையம் அமைக்க இப்போது உத்தரவிடப்பட்டு, பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்ற பதிலை மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததற்கு மிகுந்த நன்றி. நான் இந்தக் கேள்வியைக் கேட்ட பிறகு, அந்தத் துணை மின் நிலையத்திற்கு இடத்தை கையகப்படுத்தி மின் துறையிடம் ஒப்படைக்க காலதாமதம் ஆகும் என்பதால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலையிட்டு, அந்த இடத்திற்கு* enter upon permission *பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் விரைவாக, வேகமாக அந்தப் பணியை செயல்படுத்துவதற்கு முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதற்காக நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–25

TANGEDCO *என்கிற மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தினுடைய செயல்பாடுகளால் இன்றைக்கு தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் மின்சாரப் பயன்பாட்டில் தன்னிறைவைப் பெற்று மின் உற்பத்தியில், மின் மிகை மாநிலம் என்கிற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம்.* TANGEDCO*–ஐப் பொறுத்தவரையில் அதனுடைய* distribution network *மிகச் சிறப்பாக இருக்கிறது. அந்த வகையிலே இதுபோன்ற துணை மின் நிலையங்களை அதிகமாக ஏற்படுத்துவது,* transformers*–ஐ அதிகமாக அமைப்பது, ஏற்கெனவே இருக்கின்ற பழைய* transformers*–ஐ மாற்றி அமைப்பது, இன்னும் சொல்லப்போனால் அந்தப் பழைய* transformers*–ன்* capacity*–ஐ அதிகப்படுத்துவது போன்றவற்றை சிறப்பாகச் செய்து வருகிறது.* HT line*–னோடு* LT line*–ஐ அமைக்கின்றபோது* distribution network*–ஐ மிகச் சிறப்பாக* TANGEDCO *அமைத்து வருகிறது. இதனால் என்ன நன்மை ஏற்படுகிறது என்று சொன்னால்,* line loss *குறைகிறது.*

2018 ஜூன் 5]

தங்குதடையில்லாமல் மின்சாரம், அதாவது uninterrupted electricity *நமக்கு கிடைக்கிறது. இன்னும் சொல்லப்போனால்,* low voltage *என்ற பிரச்சினையே ஏற்படாத அளவிற்கு இன்றைக்கு மின் வாரியம் மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. அந்த வகையிலே என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில், 4 இடங்களில் துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களும் உத்தரவிட்டு, அந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கொளத்தூர் ஒன்றியத்தில், பூமனூர் மற்றும் சத்யா நகர் ஆகிய இடங்களில் நிலம் கையகப்படுத்தப்பட்டு, ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. மேச்சேரி ஒன்றியத்தைப் பொறுத்தவரையில் கொப்பம் பிரிவு ரோட்டில் இந்து சமய அறநிலையத் துறைக்குச் சொந்தமான நிலத்தை கையகப்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எனவே, அந்தப் பணிகளையும் விரைவுப்படுத்தி, இந்த 4 துணை மின் நிலையங்களினுடைய உற்பத்தியையும், செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்வாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன். இதை நான் கேட்பதற்குக் காரணம் என்னவென்றால், மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையில் அந்தத் துறை மிக வேகமாக செயல்படும் என்ற ஓர் உத்தரவாதத்தை அளித்தார்கள். எனவே, அந்த 4 துணை மின் நிலையங்களையும் செயல்பாட்டிற்குக் கொண்டுவருவதற்கு துரிதமாக நடவடிக்கை மேற்கொள்ள மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கோரிக்கைகளுக்கு கிட்டத்தட்ட 75 சதவிகிதம் அவரே பதிலை தெரிவித்துவிட்டார். 33/11 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்காக இடம் கையகப்படுத்தப்பட்டு, பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. டிசம்பர் மாதத்தில் அந்தப் பணிகள் அனைத்தும் முடிவுபெற்றுவிடும். பொட்டனேரி வவ்வால் தோப்பு என்ற இடத்திலே அதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு,*

தற்போது பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பூமனூர் மற்றும் சத்யா நகர் ஆகிய இடங்களில், சத்யா நகரில் மட்டும் நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்கிறது. பூமனூரில் enter upon permission இன்னும் வராமல் இருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடம் அதுகுறித்த அனுமதி கோரப்பட்டிருக்கிறது. அனுமதி பெறப்பட்டவுடன், அந்தப் பணிகளையும் தொடங்க இருக்கிறோம். மேட்டூர் வளர்ந்து வருகின்ற ஒரு தொழில் நகரமாக இருக்கின்ற காரணத்தால்தான் 4 துணை மின் நிலையங்களை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பணிகளை மேற்கொண்டிருக்கிறது. அந்த 4 துணை மின் நிலையங்களுடைய பணிகள் அனைத்தும் எந்த நிலையில் இருக்கின்றன என்பது குறித்தெல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழியில் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுடைய தலைமையில் செயல்படும் அரசு தமிழகத்தில் தடையில்லாமல் மின்சாரம் வழங்க வேண்டும்; சீரான மின்சாரம் வழங்க வேண்டும்; மின்பளு காரணமாக, மின்னழுத்தத்தின் காரணமாக low voltage இருக்கக் கூடாது என்பதைத்தான் அரசு கொள்கையாகக் கொண்டிருக்கிறது. மின்சாரத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தின்போது, எத்தனை துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன, எவ்வளவு கிலோ மீட்டருக்கு conductor–ஐ நாங்கள் மாற்றியிருக்கிறோம், எத்தனை கம்பங்களை மாற்றியிருக்கிறோம் என்பதையெல்லாம் தெளிவாக என்னுடைய பதிலுரையில் நான் குறிப்பிட்டேன். அந்த அடிப்படையில், சேலம் மாவட்டத்தில், தற்போது 28 துணை மின் நிலையங்கள் இருக்கின்றன. மேற்குறிப்பிட்ட 4 துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகளும் தற்போது நடைபெற்று வருகின்றன. இன்னும் கூடுதலாக 4 துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், அதாவது 110 கி.வோ. அளவில் 3 துணை மின் நிலையங்களும், 230 கி.வோ. அளவில் ஒரு துணை மின் நிலையமும் அமைக்க இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி எதிர்காலத்தில் அந்தப் பகுதிகளில் சீரான மின்சாரம், தேவையான அளவில் உடனடியாக வழங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S. செம்மலை அவர்கள்.*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேச்சேரி, பொட்டனேரி, வவ்வால் தோப்பு பகுதிகளில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் டிசம்பர் மாதத்தில் முடிக்கப்படும் என்று* positive *ஆன பதிலை தெரிவித்த மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–30

ஒரு பொதுவான கேள்வியை மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்களிடத்தில் நான் கேட்க விரும்புகிறேன். நமது grids*–க்கு இப்போது* base load*–ஏ* thermal *தான். நம்முடைய 3–ல் 1 பங்கு தேவையை* Thermal*–மூலமான மின் உற்பத்திதான் இன்றைக்கு பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய வழிகாட்டுதலின்படி மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்* Thermal stations*–ல் 2 நாட்களுக்குத் தேவையான நிலக்கரி இருப்பு இருந்த நிலைமையை மாற்றி, 5 நாட்களுக்குத் தேவையான நிலக்கரி இருப்பில் இருக்கிற அளவுக்கு உயர்த்தி இருப்பதாக மானியக் கோரிக்கையின்மீதான விவாதத்தின்போது தெளிவுபட எடுத்துச் சொன்னார்கள். ஆனால், 15 நாட்களுக்குத் தேவையான நிலக்கரி இருப்பில் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் நமக்கு நிலையான மின்சார உற்பத்திக்கு உத்தரவாதம் ஏற்படும். அந்த வகையிலே,* TANGEDCO*–ஐப் பொறுத்தவரையில்* procurement and transport*–தான் மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. பொதுவாக, ஒடிசாவிலிருந்து,* West Bengal*–லிலிருந்து,* Andhra Pradesh*–லிலிருந்து, நம்முடைய மாநிலத்திற்கு நிலக்கரி வர வேண்டும் என்று சொன்னால்,* sea route*–ன் மூலமாகக் கப்பல்கள் மூலமாகத்தான் வருகிறது.* TANGEDCO *அதை* transport *செய்வதற்கு ஓர் அரசு நிறுவனத்தைத்தான் நம்பியிருக்கிறது. அந்த அரசு நிறுவனம் தனியார் நிறுவனங்களிடம் அந்தப் பணியை ஒப்படைக்கும்போது நிலக்கரி வந்து சேருவதிலே காலதாமதம் ஏற்படுகிறது. எனவே, புதிய, புதிய திட்டங்களைச் செயல்படுத்தி வருவதிலே வல்லவர் என்கிற முறையிலே மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரிடம் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது) முடித்துவிடுகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நேரம் இப்பொழுது 10–31. மூன்றாவது கேள்வியில் இருக்கிறேன்.*

[2018 ஜூன் 5

திரு. S. செம்மலை: *முடித்துவிடுகிறேன். இது நல்ல கேள்வி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் நல்ல கேள்விதான் கேட்பீர்கள். எனக்கு நேரமில்லையே?*

திரு. S. செம்மலை: *மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுடன் கலந்து பேசி, ஏன் அந்தப் பணியை* TANGEDCO*–வே தொடரக் கூடாது? ஒரு தனி பிரிவை அதாவது தனியாக ஒரு* wing*–ஐ அந்த* TANGEDCO*–ல் ஏற்படுத்தி* TANGEDCO *மூலமாகவே* sea route*–லே நிலக்கரியைக் கொண்டு வந்து, நம்முடைய* thermal station*–ல் சேர்த்தால் நமக்கு செலவும் குறையும், நிதியும் மிச்சமாகும். எனவே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்த நடவடிக்கையிலே* TANGEDCO*–வை இறக்குவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மானியக் கோரிக்கையின்போது அதற்குண்டான பதிலைச் சொல்லியிருந்தேன். அன்றையதினம் எதிர்க்கட்சியைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அவையில் இல்லை. அவர்களிடத்திலும் சேர்ந்து ஒரு கோரிக்கை வைக்க இருக்கின்றோம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த ஆண்டு 132 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று சொன்னார். அதற்குண்டான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதற்குண்டான பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றபோது பல்வேறு இடங்களிலே இடம் தேர்வு செய்வதில் பிரச்சினைகள் இருக்கின்றன. அதற்குதான் நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன்.*

ஒன்று, அந்தந்த பகுதியில் துணை மின் நிலையம் வேண்டும் என்று கூறும் சட்டமன்ற உறுப்பினர்கள் இடத்தைத் தேர்வு செய்து கொடுத்தால், முன்னுரிமை அடிப்படையில் அந்தப் பணிகள் உடனடியாகத் தொடங்கப்படும் என்று சொல்லியிருந்தேன்.

இரண்டாவதாக, அந்தத் துணை மின் நிலையங்களுக்கு மின் பாதைகள் அமைப்பது என்பது இப்போது பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. அன்றையதினம்கூட, மரியாதைக்குரிய காங்கிரஸ் உறுப்பினர் திரு. காளிமுத்து அவர்கள் கேட்கின்றபோது, நான் தெளிவாகச் சொன்னேன். மின் வாரியத்தினுடைய மின் பாதை

2018 ஜூன் 5]

அமைக்கும்போது, அனைத்து பகுதிகளிலுமே என்னுடைய இடத்தில் போடக் கூடாது, என்னுடைய இடத்தில் போடக் கூடாது என்று ஒவ்வொருவரும் அதற்காக பிரச்சினை செய்து கொண்டிருந்தால், உற்பத்தியாகின்ற மின்சாரத்தை முழுமையாக நாம் துணை மின் நிலையத்திற்கு கொண்டு வந்து சேர்க்க முடியாது. அதற்கு அனைத்து கட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும். விவசாயிகளும் ஒத்துழைத்தால்தான் அதுபோன்ற பணிகளை நாம் மேற்கொள்ள முடியும் என்று நான் ஏற்கெனவே கோரிக்கை வைத்திருக்கின்றேன். அதன் அடிப்படையிலே பார்க்கும்போது துணை மின் நிலையங்கள் அமைப்பதில் பிரச்சினை இல்லை. மின் பாதை அமைப்பதில் தான் பிரச்சினைகள் இருக்கின்றன. அது ஒரு புறம் இருக்கட்டும்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கேள்வியைக் கேட்டிருக்கின்றார்கள். 5 நாட்களுக்குத் தேவையான நிலக்கரிதான் கையிருப்பில் இருக்கின்றது. 15 நாட்களுக்குத் தேவையானது கையிருப்பில் இருக்க வேண்டும். அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் கடந்த முறை சொன்னதைப்போலவே, இந்தியா முழுவதும் இப்பொழுது அனல் மின் நிலையங்கள் கோடைக்காலமாக இருக்கின்ற காரணத்தினால் முழு உற்பத்தியைச் செய்து கொண்டிருக்கின்றன. இந்தியா முழுவதுமே நிலக்கரியை இறக்குமதி செய்து தருவது என்ற கொள்கைக்கு மத்திய அரசு மாறிவிட்ட காரணத்தினால், அனைத்து நிலக்கரியும் நாங்களே கொடுத்துவிடுகிறோம் என்று அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசே கொடுத்துக் கொண்டிருந்தது. இந்த ஆண்டு கோடையினுடைய தாக்கம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், அனைத்து அனல் மின் நிலையங்களிலும் முழு உற்பத்தியைக் கொண்டு வர சொல்லியிருக்கிற காரணத்தினால், போதிய நிலக்கரியை அவர்களால் அனுப்ப முடியவில்லை. ஆதலால், கடந்த முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள் எங்களிடத்திலே அறிவுரை வழங்கி, நாங்கள் மத்திய அமைச்சரை சந்தித்தபோது, தினந்தோறும் இரயில்மூலம் 20 ரேக்குகளில் எங்களுக்கு நிலக்கரி வர வேண்டும் என்று கேட்டோம். ஆனால், 13 ரேக்குகளில்தான் வந்துகொண்டிருக்கிறது. 20 ரேக்குகள் வேண்டும் என்று சொன்னவுடன், மத்திய அமைச்சர் அவர்கள் உடனடியாக 17, 18 ரேக்குகள் என்று கடந்த 5 நாட்களாக அனுப்பிக் கொண்டிருக்கின்றார்கள். நிலக்கரி இருப்பைப்

பொறுத்தவரையில் 1.74 நாட்கள் என்றிருந்தது, தற்சமயம் 5 நாட்களாக உயர்ந்திருக்கின்றது. இப்பொழுது காற்றாலையின் மூலமாக மின்சாரம் வந்து கொண்டிருக்கிற காரணத்தினால் அனல் மின் நிலையத்தினுடைய உற்பத்தியைக் கொஞ்சம் குறைத்திருக்கின்றோம். வருகின்ற நிலக்கரியை சேமிக்கின்ற வகையில் அதை ஓர் ஏற்பாடாகச் செய்து கொண்டிருக்கின்றோம். அது ஒன்று.

முற்பகல் 10–35

இரண்டாவதாக, TANGEDCO–வே நிலக்கரியை transport செய்யும் பணியைச் செய்ய வேண்டும் என்று தெரிவித்திருக்கிறார். லாரிகளில் நிலக்கரியை அனல் மின் நிலையத்திற்குக் கொண்டுவந்து முழுமையான மின் உற்பத்தியைச் செய்ய முடியாது. இரயில் மூலமாகத்தான் நிலக்கரியைக் கொண்டு செல்ல வேண்டும். இரயில் மூலமாகக் கொண்டு வருகின்றபோது கட்டணம் அதிகமாக இருந்தாலும்கூட, நமக்கு வேறு வழியில்லை. நமக்குத் தேவையான நிலக்கரியை இரயில் மூலமாகக் கொண்டுவந்தால்தான் தேவையான நிலக்கரி நமக்குக் கிடைக்கும் என்ற காரணத்தால்தான் 20 ரேக்குகள் வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கின்றோம். அந்த அடிப்படையில் தற்போது நிலக்கரி வந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால், இன்னும் 10 அல்லது 15 நாட்களுக்குள் தற்போது 5 நாட்களுக்குத் தேவையான நிலக்கரி இருப்பில் இருக்கிற நிலைமையை மாற்றி 7, 8 நாட்களுக்கு இருப்பில் இருக்குமளவுக்கு நிலைமையைக் கொண்டு வந்து விடுவோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கடந்த முறையே இந்தக் கோரிக்கையை வைத்திருந்தார்கள். மக்களுடைய எண்ணத்திற்கேற்ப மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு நடந்துகொள்ளும். எந்தச் சூழ்நிலையிலும், அனல் மின் நிலையத்தில் நிலக்கரி இல்லாமல், உற்பத்தி பாதிக்கப்படாத அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் அரசு பார்த்துக்கொள்ளும் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 124, மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.